## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! (30.7.2025)



### கிராமப் பஞ்சாயத்துகளின்

# சொந்த வருவாய் மேம்பட என்ன நடவடிக்கை?

## மக்களவையில் — கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 1-

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கிராமப் பஞ்சாயத்துகளின் நிதி சுய சார்பு குறித்த கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பினார்.

”2017 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், மாநில மற்றும் ஆண்டு வாரியாக, நாட்டில் உள்ள கிராம பஞ்சாயத்துகளின் சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாய் (OSR) மற்றும் தனிநபர் வருவாய் எவ்வளவு?

அதிக மற்றும் குறைந்த தனிநபர் OSR உள்ள மாநிலங்களிடையே இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கான முக்கிய காரணிகள் என்ன?

சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாயை உருவாக்குவதில் கிராமப் பஞ்சாயத்துகள் எதிர்கொள்ளும் நிர்வாகத் தடைகள் உள்ளிட்ட சவால்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா?

சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாயை அதிகப்படுத்துவதன் மூலம், பஞ்சாயத்துகளின் நிதி சுயாட்சியை மேம்படுத்த திறன் மேம்பாட்டு முயற்சிகள், கொள்கை சீர்திருத்தங்கள் போன்ற அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

சொந்த வருவாய் குறைவு காரணமாக பஞ்சாயத்துகளின் செயல்பாடு மற்றும் சேவை வழங்கலில் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றி அரசு ஏதேனும் மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?

ஆகிய கேள்விகளை எழுப்பினார் கனிமொழி கருணாநிதி

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் அளித்த பதிலில்,

”இந்திய அரசியலமைப்பு சட்டம் 243 H இன் படி கிராம பஞ்சாயத்துகள் வரி வசூலிப்பது கட்டணங்கள் மற்றும் சுங்கம் வசூலிப்பது ஆகியவற்றை அந்தந்த மாநில அரசுகளே நிர்ணயிக்கி ன்றன. இதற்கான சட்டங்களை மாநில சட்டமன்றங்களே இயற்றுகின்றன.

எனவே ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சரவை அனைத்து கிராம பஞ்சாயத்துகளின் சொந்த வருவாய் பற்றிய விவரங்களை பெற்றிருக்கவில்லை.

உள்ளாட்சி அரசமைப்புகள் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் படி மாநில அரசுகளுக்கு உட்பட்டவை. மேலும், மாநிலங்களும் பஞ்சாயத்துகளும் பெரும்பாலும் பஞ்சாயத்துகள் தொடர்பான OSR தரவைப் பகிர்ந்து கொள்வ தில்லை.

இருப்பினும், பஞ்சாயத்துகளின் OSR இன் நிலையை ஆய்வு செய்வதற்காக பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் 2022 இல் “கிராமப்புற உள்ளூர் அமைப்புகளின் சொந்த வள வருவாய் குறித்த நிபுணர் குழுவை” அமைத்தது.

அந்த நிபுணர் குழுவின் அறிக்கையின்படி நாடு முழுவதிலும் 2017- 18 நிதி ஆண்டில் 5378.74 கோடி ரூபாயாகவும், 2018 19 நிதி ஆண்டில் 5459.38 கோடி ரூபாயாகவும், 2019- 20 நிதியாண்டில் 5099.84 கோடி ரூபாயாகவும், 2020- 21 நிதி ஆண்டில் 4844.47 கோடி ரூபாயாகவும், 2021- 22 நிதியா ண்டில் 4812.46 கோடி ரூபாயாகவும் கிராமப்புற பஞ்சாயத்துகளின் சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாய் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் 2017 -18 நிதி ஆண்டில் 731.93 கோடி ரூபாய், 2018 -19 நிதி ஆண்டில் 795.24 கோடி ரூபாய், 2019- 20 நிதி ஆண்டில் 433.49 கோடி ரூபாய், 2020-21 நிதி ஆண்டில் 209.3 கோடி ரூபாய், 2021 -22 நிதி ஆண்டில் 411.55 கோடி ரூபாய் என கிராம பஞ்சாயத்துகளின் சொந்த வளத்தின் அடிப்படையிலான வருவாய் அமைந்துள்ளது.

2017- 18 நிதி ஆண்டு முதல் 2021- 22 நிதியாண்டு வரை தமிழ்நாட்டின் கிராமப்புற பஞ்சாயத்துகளில் சராசரி சொந்த வருவாய் 516.3 கோடி ரூபாயாகவும், தனிநபர் வருமானம் 109 ரூபாயாகவும் இருக்கிறது என நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையின்படி, 2017-18 முதல் 2021-22 வரை 30 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் பஞ்சா யத்துகள் சுமார் ரூ. 25,595 கோடி OSR சேகரித்துள்ளன. மேலும் தேசிய அளவில் தனிநபர் சொந்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 59 ஆக இருந்தது. அதே காலகட்டத்தில். தனிநபர் சொந்த வருமானம் மாநிலங்கள் முழுவதும் கணிசமாக வேறுபடுகிறது.

நிபுணர் குழு அறிக்கையின்படி, OSR ஐ உருவாக்குவதில் பஞ்சாயத்துகள் எதிர்கொள்ளும் இந்த ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சவால்களுக்கு காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன.



மாநில அளவில் பஞ்சாயத்துகளுக்கான விதிகள் - வழிகாட்டுதல்களை உருவாக்காதது அல்லது புதுப்பிக்காதது,

வரிகள், கட்டணங்கள், சுங்கவரிகளை விதிக்க மாநிலங்கள் பஞ்சாயத்துகளுக்கு போதுமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காதது.

சில மாநிலங்களில் வரிகள், கட்டணங்களை விதிக்க பஞ்சாயத்துகளே ஆர்வமில்லாமல் இருப்பது, பஞ்சாயத்துக்கு உட்பட்ட மக்களின் ஒத்துழைப்பு இல்லாதது, பஞ்சாயத்துகள் ஒன்றிய-மாநில அரசுகளின் நிதியுதவியை சார்ந்தி ருப்பது, வரி வருவாய் ஈட்டுவதற்கான உள்கட்டமைப்பு பற்றாக்குறை, தற்போதுள்ள வரி விதிப்பு அதிகாரங்களை போதுமான அளவில் பயன்படுத்தாது ஆகியவையே பஞ்சாயத்துகளின் சொந்த வருவாய் வளத்தை பெருக்க முடியாமைக்கான காரணங்கள் என நிபுணர் குழு தெரிவிக்கிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பஞ்சாயத்து அமைப்புகளின் நிர்வாகத் திறன்களை வளர்ப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசு நிதியுதவியுடன் கூடிய புதுப்பிக்கப்பட்ட ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டம் பஞ்சாயத்துகள் தங்கள் சொந்த வருவாய் ஆதாரங்களை உயர்த்துவதற்கான திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது பஞ்சாயத்துகளில் பொருளாதார மேம்பாட்டுக்கும் மற்றும் வருமான மேம்பாட்டுக்குமான இடைவெளியை நிரப்பும் வகையில் உதவிகள் செய்கிறது.

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM-A) உடன் இணைந்து, பஞ்சாயத்துகளால் சொந்த வளத்தின் அடிப்படையிலான மூல வருவாயை (OSR) உருவாக்குவது குறித்த சிறப்புக் கூறுகளை உருவாக்கியுள்ளது.

31 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர்களை உருவாக்கி அவர்களுக்கு IIM குழுவின்ரால் பயிற்சி அளிக்கப்படுகிறது.

புதுப்பிக்கப்பட்ட ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில், தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தன்று (NPRD) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆத்ம நிர்பர் பஞ்சாயத்து சிறப்பு விருதை (ANPSA) அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் சொந்த மூல வருவாயை (OSR) அதிகரிப்பதன் மூலம் சுயசார்பு கிராம பஞ்சாயத்துகளின் முன்மாதிரியான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் அங்கீகரிப்பதற்கும் அமை ச்சகம் பிரத்யேக சிறப்பு வகை விருதுகளை நிறுவியுள்ளது.

இந்த விருதுகள் கிராமப் பஞ்சாயத்துகள் சொந்த மூல வருவாயை (OSR) அதிகரிக்க ஊக்கமளிக்கிறது.

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வரி பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் வருவாயை ஆன்லைனில் கண்காணித்தல் ஆகியவற்றை எளிதாக்கும் ஒரு பிரத்யேக டிஜிட்டல் தளமான “SAMARTH பஞ்சாயத்து போர்ட்டலை” உருவாக்கி, பஞ்சாயத்துகளின் OSR சேகரிப்பை டிஜிட்டல் மயமாக்குவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது.

இந்த டிஜிட்டல் அதிகாரமளித்தல், உள்ளூர் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் அளவிடுதல் ஆகியவற்றைக் கொண்டு வர வடிவமைக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்துகளின் சொந்த வருவாய் ஆதாரங்களுக்கான மாதிரி விதிகளை உருவாக்க பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் (MOPR) ஒரு குழுவையும் அமைத்துள்ளது, இது மாநிலங்கள் தங்கள் OSR விதிகளை உருவாக்குவதிலும் திருத்துவதிலும் ஒரு அளவுகோலாக செயல்படும்” என்று தெரிவித்துள்ளார் ஒன்றிய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர்.

### தமிழ்நாட்டில் மழை மற்றும்

# புயலைப் பற்றி துல்லியமாக அறிவிக்கப் போவது எப்போது?

## மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், காற்றின் திசை மற்றும் மழை அளவு போன்ற வானிலை தகவல்களை சேகரித்து, அதை பயன்படுத்தி, வானிலை முன்னறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது இந்திய வானிலை ஆய்வு மையம் (India Meteorological Department, IMD). மேலும், தொடர்ந்து வானிலை தரவுகளை சேகரித்து, பகுப்பாய்வு செய்து, வானிலை மாற்றங்களை கண்காணிக்கிறது. ஆனால் முறையாக வானிலை தரவுகள் கணிக்கப்பட்டு, பேரிடர் நேராமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க ஒன்றிய அரசால் அறிவுறுத்தப்படுகிறதா என்பது கேள்விக்குறியே. வானிலை முன்னறிவிப்புகளை மேலும் துல்லியப்படுத்துவதற்கான தேவை தற்போது அதிகரித்துள்ளது.

எனவே வானிலை முன்னறிவிப்புகளை மேலும் துல்லியப்படுத்துவதற்கு ஏதேனும் சிறப்பு திட்டங்கள் உள்ளதா? என நாடாளுமன்றத்தில், கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் போன்ற வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய கடலோர மாவட்டங்களில் தானியங்கி வானிலை மையங்கள் (AWS) மற்றும் டாப்ளர் ரேடார்களை நிறுவும் திட்டத்தை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளதா? ஆம் எனில், அவை எந்தெந்த பகுதிகளில் நிறுவப்பட வுள்ளது? அதற்கான காலக்கெடு எவ்வளவு?



மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் டெல்டா பகுதிகள் உட்பட தமிழ்நாட்டின் புவியியல் பகுதிகளில், நடப்பு வானிலை நிலவரம் மற்றும் சில மணிநேரம் முதல் சில நாட்களுக்கு முன்பு வரை தெரிவிக்கப்படக்கூடிய வானிலை முன்னறிவிப்புகளை மேலும் துல்லியப்படுத்துவதற்கு ஏதேனும் சிறப்பு திட்டங்கள் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேம்படுத்த மற்றும் பாதிப்புகளை குறைக்க, நடப்பு வானிலை எச்சரிக்கைகள் மற்றும் பாதிப்பு நேர்ந்த இடத்தை வரைபடங்கள் மூலம் தெரிவிக்கும் முறையையும் மேம்படுத்த, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (TNSDMA) மற்றும் உள்ளூர் பஞ்சாயத்துகளுடன் இணைந்து பணியாற்ற அரசு திட்டமிட்டுள்ளதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் கிராமப்புற மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களும் எளிதில் அணுகும் வகையில், IMD மொபைல் செயலியில், தமிழ் மொழியிலேயே விவசாயிகளுக்கான முன்னறிவிப்பு தகவல்களை வழங்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் இருக்கிறதா? ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

### தங்கத்தின் விலை உயர்வினால்,

# சில்லறை பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் என்னென்ன?

## மக்களவையில் — டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில், தங்கத்தின் விலை உயர்வினால், சில்லறை பணவீக்கம் அதிகரி;த்துள்ளது, ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும் சில்லறை பணவீக்கத்தின் தாக்கத்தை கட்டுபடுத்த ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் தங்கத்தின் அடகு விற்பனை அதிகரி;த்து வருவதை தடுக்கவும், மக்களின் துயரங்களை தீர்க்கவும் ஒன்றிய அரசின் முயற்சிகள் என்னென்ன? என்றும். ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி; அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

தங்கத்தின் விலை உயர்வு நுகர்வோர் விலைக் குறியீட்டில் 20 சதவீதம் அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், தங்கத்தில் மூதலீடு செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்றும், சமூக குடும்ப விழாக்களில். தங்கத்தை பரிசளிப்பது காலம் காலமாக தொடர்ந்து வரும் மரபாக இருப்பதால், தங்கத்தின் பயன்பாடு, அவசரத் தேவைக்காக தங்கத்தினை அடகுவைத்து பணமாக மாற்றும் முயற்சி களின் காரணமாகவும், தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

தங்கத்தினை அடகு வைத்து ரூபாய் 2.5 இலட்சம் வரை கடன் பெறும் பயனாளிகளுக்கு 85 சதவீதம் வரை கடன் கிடைக்கவும் ரூபாய் ஐந்து இலட்சம் வரை கடன் பெறும் பயனாளிகளுக்கு 80 சதவீதம் வரை கடன் கிடைக்கவும், ஐந்து இலட்சத்திற்கும் மேல் கடன் பெறும் பயனாளிகளுக்கு 75 சதவீதம் வரை கடன் தொகை கிடைக்கும் அளவிற்கு ரிசர்வ் வங்கியின் கடன் நெறிமுறைகளை வகுக்கப்பட்டுள்ளன என்றும், கடந்த மே மாதம் 2025 நிலவரப்படி தங்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள கடன் மதிப்பு ரூபாய் 2,51,369 கோடிகளாக உள்ளது என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி, பதிலை அளித்துள்ளார்.

### கிக் மற்றும் அமைப்புசாரா துறை தொழிலாளர்களின்

# நலத் திட்டங்களுக்காக ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ள பட்ஜெட் - சிறப்பு சலுகைகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1 -

தர்மபுரி தொகுதி உட்பட தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சமூகப் பாதுகாப்பு சலுகைகளுடன் வழங்கப்பட்ட அமைப்புசாரா துறையில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை,செயலி அடிப்படையிலான சேவைகள், விநியோக சேவைகள் மற்றும் ஃப்ரீலான்சிங் ஆகியவற்றில் பணிபுரியும் கிக் தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்க ஒன்றிய அரசு ஏதேனும் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறதா?

அப்படியானால்,அதன் விவரங்கள்,நடப்பு நிதியாண்டில் கிக் மற்றும் அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் நலத் திட்டங்களுக்காக ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ள பட்ஜெட் பற்றிய விவரங்கள் மற்றும் கிக் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அரசு பங்குதாரர்களுடன் ஏதேனும் ஆலோசனைகளை நடத்தியுள்ளதா?



அவ்வாறு இருந்தால்,அதன் விவரங்கள் என்ன? என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் சுஶ்ரி ஷோபா கரண்ட்லஜே விடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

### வரிப்பகிர்வில் மற்ற மாநிலங்களுக்கு அதிக நிதி அளிக்கும் நிலையில் - ஒன்றிய அரசு

# தமிழ்நாட்டிற்கு மட்டும் ரூபாய்க்கு வெறும் 29 பைசா வழங்கி ஏன் வஞ்சிக்கிறது?

## மாநிலங்களவையில் — மரு.கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

தேசிய வரிப்பகிர்வில் மற்ற மாநிலங்கள் அதிகளவில் நிதியை பெறும் நேரத்தில் தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய்க்கு வெறும் 29 பைசா தான் அளிக்கப்படுகிறதா?

மாநில வாரியான வரிப்பகிர்வு பற்றிய தரவுகளை பகிர வேண்டும்.

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிக்கும் தமிழ்நாட்டிற்கு மட்டும் நிதிப்பங்கீட்டில் இவ்வகையிலான பாரபட்சமான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதை ஒன்றிய அரசு எப்படி நியாயப்படுத்தப் போகிறது?



இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகளை களைந்து தமிழ்நாட்டிற்கு நியாயமான வரிப்பகிர்வை உறுதி செய்திட ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர். பங்கஜ் சௌத்திரி அளித்துள்ள பதில்

15வது நிதிக்குழுவின் வரிகள் மற்றும் தீர்வுகள் பங்கீட்டிற்கான பரிந்துரைகளின் படி தமிழ்நாட்டிற்கு மொத்த வரி வருவாயில் 4.079 சதவீத நிதி வரிப்பகிர்வில் வழங்கப்படுகிறது.

ஒன்றிய நிதி ஆணையத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அந்தந்த மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு அளவீடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

2025-26ம் நிதி ஆண்டில் அதிகபட்சமாக உத்தர பிரதேசத்திற்கு 17.939 சதவீதமும், பீஹார் மாநிலத்திற்கு 10.058 சதவீதமும், மத்திய பிரதேசத்திற்கு 7.850 சதவீதமும் வழங்கப்படும் நிலையில் ஆந்திர மாநிலத்திற்கு 4.047 சதவீதமும் தமிழ்நாட்டிற்கு 4.079 சதவீதம் மட்டுமே வழங்கப்படும் என்று ஒன்றிய நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்திரி பதில் அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் பழங்குடியினருக்கான

# தேசிய தொழில் சேவை மையங்கள் எவ்வளவு?

## மக்களவையில் — சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1 -

தமிழ்நாட்டில் பழங்குடியினருக்கான தேசிய தொழில் சேவை மையங்கள் குறித்து மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை பின் வருமாறு கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:-

(அ) தமிழ்நாட்டில் தற்போது செயல்படும் பட்டியல் சாதியினர்/பட்டியல் பழங்குடியினருக்கான (SCs/STs) தேசிய தொழில்



சேவை மையங்களின் (NCSC3) எண்ணிக்கையின் விவரங்கள்;

(ஆ) 2022-23 மற்றும் 2023-24 நிதியாண்டுகளில் இந்த மையங்கள் மூலம் ஆலோசனை, பயிற்சி அல்லது பயிற்சி பெற்ற மொத்த SC/ST வேட்பாளர்களின் விவரங்கள்;

(இ) தமிழ்நாட்டின் மலைப்பகுதி அல்லது பழங்குடிப் பகுதிகளில் உள்ள பட்டியல் பழங்குடி சமூகங்களுக்காக இந்த மையங்களின் கீழ் ஏதேனும் இலக்கு முயற்சிகள் உள்ளதா, அப்படியானால், அவற்றின் விவரங்கள்;

(ஈ) தமிழ்நாட்டில் இந்த மையங்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட, பயிற்சி பெற்ற மற்றும் வேலை வாய்ப்பு பெற்ற வேலை தேடுபவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள், வகை வாரியாக; மற்றும்

(உ) தமிழ்நாட்டில் இந்த மையங்களை விரிவு படுத்தவோ அல்லது மேம்படுத்தவோ அரசுக்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.